## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.**3/2019

வாக்குமூலம்..வா.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சவரிமுத்து | ஜாதி | |
| த/பெ. | அருளானந்து | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 40 / 2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு .10.12.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. என்னுடைய நிரூபண வாக்குமூலத்திற்கு விவரம் நான்தான் சொன்னேன். அண்ணாமலை இறந்துவிட்டதாக குறிபிட்டு இருப்பது தவறு என்றாலும், அவர் உயிருடன்தான் இருக்கிறார் என்றால் சரிதான். அண்ணாமலை எவ்வளவு சொத்துகள் இருந்தது அதை யாரிடம் கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்கு உண்டான பஞ்சாயத்திற்கு சென்றேன். என்னுடைய முதல் விசாரணையில் பஞ்சாயத்து பற்றி நான் சொல்லவில்லை என்றாலும், முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துப்பற்றி எனக்கு தெரியாது என்றாலும், வாதிகள் எனது நண்பர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னை இன்று நீதிமன்றத்திற்கு வாதிகள் இருவரும் அழைத்து வந்தார்கள். வாதிகள் கேட்ட கொண்டப்படி தான் முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூல சங்கதிகள் வாதிகள் தான் சொன்னது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அண்ணாமலை தாவா சொத்தை வாதிகள் சிறு குழந்தைகளாக 3, 4 வயதில் இருக்கும்போதே கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அண்ணாமலை கொத்தனார் வேலை பார்த்தார் என்றால் சரிதான்.

2. அண்ணாமலை கிரையம் வாங்கிய சொத்தை கிரையம் விற்க அவருக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். அண்ணாமலை விற்று அதை வாதிகள் மீண்டும் வாங்கினார்கள். மேற்படி வாதிகள் வாங்கிய பத்திரத்தை என்னிடம் காண்பித்தார்களா என்றால் அது வெண்ணிலை ஆவணமாகும். அந்த வெண்ணிலை ஆவணத்தின் முத்திரை தாள் விவரங்கள் எனக்கு தெரியாது. அண்ணாமலை தற்போது உயிருடன் தான் இருக்கிறார். உயிருடன் உள்ள அண்ணாமலை இறந்து விட்டார் என்று நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியிருப்பதால் எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அண்ணாமலைக்கு தாவா சொத்தை கிரையம் செய்ய உரிமை உண்டு என்றாலும், கிரைய பத்திரத்தை தாக்கல் செய்தால் அதை பதிவு செய்ய வேண்டிய கடமை 3-ம் பிரதிவாதிக்கு உண்டு என்றால் சரியல்ல.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**